# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 06.08.2026</u>

## <u>முன்னிலை</u>

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 12396/SCIC/2025</u>**

திரு.G.நாகேந்திரன், த/பெ.S.P.குருசாமி நாயுடு - மேல்முறையீட்டாளர்
எண்.15/1, கனகசபாபதி லே அவுட்
அரசு உயர்நிலைப் பள்ளி தெரு
அல்லி நகரம், தேனி டவுன்
Phone: 99690 28842.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
பெரியகுளம் (இ) தேனி - 625 601.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **25.11.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 24.12.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 30.01.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 21.03.2025 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 12.08.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 25/11/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், பெரியகுளம் (இ) தேனி அவர்களுக்கு அனுப்பி, அதில் "தேனி சார்பதிவக ஆவண எண்.354/2024-நிர் பாகப் பாத்திய விடுதலைப் பத்திரத்திற்கு கூடுதல் வசூல் செய்யப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூ.1,31,657/-ஐ எனக்கு திரும்ப வழங்க வேண்டி மாவட்ட பதிவாளருக்கு இரண்டு முறை மனுச் செய்துள்ளேன். மேற்படி மனுக்களின் பேரில் மாவட்டப் பதிவாளர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் அடங்கிய கோப்பின் சான்றிட்ட நகல் தேவை" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.G.நாகேந்திரன் அவர்கள் தேனி மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜராகவில்லை. எனினும், மனுதாரரின் சார்பில் அவரது மைத்துனர் திரு.ஜெயகோபால் அவர்கள் மனுதாரரின் அங்கீகாரக் கடிதம் இல்லாமல் ஆஜரானார். வழக்கின் தன்மையினை பரிசீலனை செய்து மனுதாரரின் பிரதிநிதியை ஆணையம் அனுமதித்தது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.அ.ரமேசு, மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), பெரியகுளம் அவர்கள் ஆஜரானார். இவ்வழக்கு கூடுதலாக முத்திரைக் கட்டணம் வசூலிக்கப்பட்டது தொடர்பானதாகத் தெரிய வருகிறது. விசாரணையின் போது மாவட்டப் பதிவாளர், தான் சம்பந்தப்பட்ட சார்பதிவாளரிடம், இப்பொருண்மை குறித்து தெரிவித்து, சரிபார்த்துவிட்டதாகவும், மனுதாரரிடம் கூடுதலாக முத்திரைக் கட்டணம் வசூலித்தது உறுதியாகியுள்ளது என்றும் அதன் அடிப்படையில் தகுதி வாய்ந்த அலுவலரான பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்களுக்கு 24/02/2026 தேதியிட்டு பரிந்துரைக் கடிதம் அனுப்பியுள்ளதாகவும், அந்நடவடிக்கை செயல்முறையில் இருந்து வருவதாகவும் தெரிவித்தார்.

**3. எனவே, பதிவுத்துறைத் தலைவர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை-28 அவர்கள், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), பெரியகுளம் அவர்கள் 24/02/2026 தேதியிட்டு அனுப்பியுள்ள பரிந்துரையின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து, உரிய தகவலை மனுதாரருக்கு (15/09/2026-க்கு முன்னதாக) அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), பெரியகுளம் பதிவு மாவட்டம் அவர்கள், மேற்குறிப்பிட்ட 24/02/2026 தேதியிட்டு பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்களுக்கு அனுப்பிய பரிந்துரைக் கடிதத்தின் நகலினை மனுதாரருக்கு உடனடியாக விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்குறிப்பிட்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

உதவி பதிவாளர்

**வழக்கு எண். SA 12396/SCIC/2025**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
பெரியகுளம் (இ) தேனி - 625 601.

2. பதிவுத்துறைத் தலைவர்,
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
100, சாந்தோம் நெடுஞ்சாலை
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

**மேல்முறையீட்டாளர்**

திரு.G.நாகேந்திரன், த/பெ.S.P.குருசாமி நாயுடு
எண்.15/1, கனகசபாபதி லே அவுட்
அரசு உயர்நிலைப் பள்ளி தெரு
அல்லி நகரம், தேனி டவுன்
Phone: 99690 28842.

RG/Sr.PC